UPDF
WWW.UPDF.COM

ආයතනයේ නම : වන සංරක්ෂණ දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගණු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

நிறுவனத்தின் பெயர் : வனப் பாதுகாப்புத் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நிலையியற் கட்டளை 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளையும் எடுத்த நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Name of the institution: Department of Forest Conservation

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the committee on public Accounts in terms of Standing Order NO. 119(4)

UPDF
WWW.UPDF.COM

பாராளுமன்ற பிரகடன தொடர் இலக்கம் : 290

நிறுவனத்தின் பெயர் : வனப் பரிபாலனத் திணைக்களம்

2021 ஆம் நிதியாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதி மற்றும் முன்னேற்ற மீளாய்வு அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள்	அதற்கென எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் ∴ தற்போதைய நிலைமைகள்
முதலாவது பகுதி :	
1. நிலையான வைப்பு ஏடு இற்றைவரைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	➢ திணைக்களத்திற்குச் சொந்தமான அனைத்து நிலையான வைப்புக்களும், சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திற்குள் - உள்ளடக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிலையான வைப்பு ஏடானது சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பேணிச் செல்லப்படுகின்றது.
2. நட்டம் தொடர்பான ஏடு இற்றைவரைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	➢ திணைக்களத்திற்குள் அதிகளவிலான கிளைகள் மற்றும் உப அலுவலகங்கள் காணப்படுவதால், நி.பி.102இன் கீழ் வருகின்ற காணாமற் போனவைகள் ∴ நட்டங்கள் ஏற்பட்டால், அவை இடம்பெற்றவுடன் பிரதான அலுவலகத்திற்கு அறிவிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பிரதான அலுவலகத்தில் பேணிச் செல்லப்படுகின்ற நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் ஏடானது இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது.
3. கணக்காகய்வாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்கள் அளிக்கப்படவில்லை.	➢ அநேகமான கணக்காய்வு ஐயவினாக்கள் வலய அலுவலகங்களுக்கும், மாவட்ட வன அலுவலகங்களுக்கும், பல்வேறு பிரிவுகளுக்கும் உரியதென்பதால், தகவல்களைக் கோரும் சந்தர்ப்பத்தில் அதற்காக காலம் எடுக்கின்றது. எனவே கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்களை ஒரு மாத காலத்திற்குள் பெற்றுக்கொள்வதென்பது கடினமாகும். இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் குறைந்த காலப்பகுதியுள் பதில்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ➢
4. 2017.06.26 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7ஆம் பந்தியின் பிரகாரம் 2018ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அழிப்புக்கள் தொடர்பிலான தகவல்கள் கொம்ப்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	➢ 2023 ஆம் நிதியாண்டு தொடக்கம் திணைக்களத்தின் அனைத்து சொத்து கொள்வனவு மற்றும் அழிப்புக்கள் என்பன தொடர்பான தகவல்கள் கொம்ப்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கை செய்யப்படுவதுடன், இனிவரும் காலங்களில் அவற்றை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
5. 2017.06.26 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 13ஆவது பந்தியின் பிரகாரம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், ஒருங்கிணைத்தல் என்பனவற்றிற்கு பொருத்தமான ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு கொம்ப்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிவிக்கப்படவில்லை.	➢ உரிய தகவல் கட்டமைப்பில் பதிவு செய்து தகவல்களை அறிக்கை செய்வதற்கும், ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு கொம்ப்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
6. 2020.08.28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அ.நி.சுற்றறிக்கையின் 11.1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் நி.பி.756(6) இன் பிரகாரம் பொருட் சுற்றாய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய திகதியில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	➢ 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக அலுவலக செயற்பாடுகளை சரியான முறையில் முன்னெடுக்க முடியாமல் போனதுடன், ஊழியர்களின் வருகையிலும் பின்னடைவுகள் காணப்பட்டன. விசேடமாக எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக உரிய உத்தியோகத்தர்கள் பிரதேச அலுவலகங்களுக்கு பொருட் சுற்றாய்வு நடவடிக்கைகளுக்கு செல்ல முடியாதிருந்ததன் காரணமாக உரிய திகதியில் அதற்கு சமூகமளிக்க முடியாதிருந்தது. எவ்வாறாயினும், 2022.03.31ஆந் திகதி உரிய அறிக்கையானது கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு

UPDF
WWW.UPDF.COM

		சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது உரிய திகதிகளில் பொருட் சுற்றாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கைகள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.
7.	வருடாந்த பொருட் சுற்றாய்வில் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம், குறைவு தொடர்பான சிபாரிசுகள் மற்றும் ஏனைய சிபாரிசுகள் என்பன உரிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	➢ உரிய காலப்பகுதியில் செயற்படுத்த முடியாமற்போனாலும், வருடாந்த பொருட்சுற்றாய்வின்போது இனங்காணப்பட்ட மேலதிகங்கள் மற்றும் குறைவுகள் என்பன தொடர்பான சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் அத்தகைய சிபாரிசுகளை உரிய காலப்பகுதியிலேயே நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	அனைத்து திணைக்கள வாகனங்களிலும் அரச இலச்சினை வரையப்பட்டிருக்கவில்லை.	➢ அனைத்து திணைக்கள வாகனங்களிலும் அரச இலச்சினையை வரைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
9.	வாகனமொன்று சேதமடைந்து 8 மாதங்களுக்கு குறைந்த காலப்பகுதியில் அழிக்கப்பட்டிருக்கவில்லை.	➢ இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் மிகக் குறைந்த காலப்பகுதியில் உரிய அழிப்பு நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இனிவரும் காலங்களில் வாகனமொன்று சேதமடைந்து 8 மாத காலப்பகுதிக்கு குறைந்த காலத்தில் உரிய அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
10.	அனைத்து வாகனங்களுக்குமென லொக் புத்தகம் இற்றைவரைப்படுத்தப்பட்ட அடிப்படையில் பேணிச் செல்லப்படவில்லை.	➢ 2024 ஆம் ஆண்டளவில் திணைக்களத்தின் வாகனங்களுக்கான லொக் புத்தகம் இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது.
11.	அரச வாகன விபத்து தொடர்பில் நி.பி. 103,104,109 மற்றும் 110 இன் அடிப்படையில் சரியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	➢ அனைத்து வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.
12.	2016.12.29. ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அ.நி.சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களது எரிபொருள் பாவனை தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	➢ 2023 ஆண்டு தொடக்கம் உரிய சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய திணைக்களத்தின் வாகனங்களின் எரிபொருள் பாவனை தொடர்பான பரிசோதனைகள் இடம்பெறுகின்றன.
13.	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் உரிய திகதியில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	➢ சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தை இற்றைவரைப்படுத்தும்போது ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக வருடத்தின் முதல் காலாண்டில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டதுடன், அதன் பின்னர் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டு தொடக்கம் பிரதேச அலுவலகங்களது வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து மின்னஞ்சல் ஊடாக கணக்காய்விற்கு அனுப்புமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
14.	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட, இணக்கம் செய்யப்படவிருந்த மீதிகள் தொடர்பில் நி.பி. அடிப்படையில் ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்க்கப்படவில்லை.	உரிய காலத்தில் மேற்கொள்ள முடியாமற்போனாலும், உரிய இணக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டு தொடக்கம் உரிய சரிப்படுத்தல்களை உரிய காலப்பகுதிக்குள் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
15.	ஏற்பாடுகளது எல்லைகளை விஞ்சி செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	➢ ஏற்பாடுகளது எல்லைகளை விஞ்சி செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை. தேவையானபோது நி.பி. பிரகாரம் ஏற்பாடுகள் மாற்றப்பட்டுள்ளன.
16.	ஒரு வருட காலப்பகுதிக்கும் மேலாக, முன்கொண்டுவரப்படுகின்ற நிலுவை கடன் மீதி காணப்படுகின்றமை.	➢ முற்பண பீ கணக்கின் நிலுவை மீதி, உரிய கடன் பட்டவர்களின் பிணையாளர்களிடமிருந்து ∴ ஓய்வு அல்லது மரண பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு அறவிடமுடியாத கடன் தொகைக்குரிய கடன்பட்டவர்களுக்கெதிராக வழக்குத் தொடர்வதற்கு சட்டமாஅதிபரின் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன.
17.	பொது வைப்புக் கணக்கின் காலங்கடந்த வைப்புகள் தொடர்பில் நி.பி.571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	➢ பொது வைப்புக் கணக்கில் இணங்காணப்பட்ட 02 வருடங்களுக்கு மேற்பட்ட அடையாளங் காணப்படாத சாதாரண வைப்புக்கள் பல 2023ஆம் ஆண்டில் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டன. காணி கோரல் தொடர்பான பிணை வைப்புக்கள், வைப்பிலிடப்பட்ட திகதி தொடக்கம் 10 வருடங்கள் பூர்த்தியானதன் பின்னரும் கருத்திட்ட நிதி வைப்புக் கருத்திட்டம்

UPDF
WWW.UPDF.COM

	முடிவடைந்த திகதி தொடக்கம் 02 வருடங்கள் முடிவடைந்த பின்னரும் உரிமைக்காக முன்வைக்கப்படவில்லையெனின், அரச வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே 2024ஆம் நிதியாண்டு தொடக்கம் ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் காலங்கடந்த அனைத்து வைப்புக்கள் தொடர்பிலும் ஒரு பட்டியலைத் தயாரிப்பதற்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
18. நி.பி.371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட குறிப்பிடத்தக் செலவுக்கான முற்பணமானது உரிய செயற்பாடுகள் முடிவடைந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.	➢ 2021 ஆம் நிதியாண்டின் அனைத்து குறிப்பிடத்தக் செலவுக்கான முற்பணமானது உரிய காலப்பகுதியில் இல்லாவிடினும், தீர்க்கப்பட்டுள்ளது. 2022ஆம் நிதியாண்டு தொடக்கம் அனைத்து குறிப்பிடத்தக் செலவுக்கான முற்பணமானது ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
19. வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது உரிய விதத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	➢ 2022 ஆம் ஆண்டின் ஏப்பிரல் மாதம் தொடக்கம் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடிகள் காரணமாக அலுவலக நடவடிக்கைகள் உரியவாறு மேற்கொள்ளப்படவில்லையாதலால் 2021ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையைத் தயாரிப்பதற்கான தகவல்களைத் திரட்டுவதில் சிக்கல்கள் காணப்பட்டன. அவ்வாறே செயலாற்றுகை அறிக்கையினைத் தயாரித்து அதன் வரைவொன்று அமைச்சிற்கு அனுப்பட்ட சந்தர்ப்பத்தில் அது திருத்தங்களுக்கு உட்பட்டதுடன், திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டு 2023.03.15ஆந் திகதி கௌரவ பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அது துறைசார் மேற்பார்வை குழுவினால் 2023.05.23ஆந் திகதி கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
20. அனுமதிக்கப்பட்ட எல்லையை விஞ்சி ஆளனிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றுள்ளன.	➢ அனுமதிக்கப்பட்ட எல்லையை விஞ்சி ஆளனிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறவில்லை.

இரண்டாம் பகுதி :

1. கோரப்பட்டுள்ள தகவல்களை வழங்காமை தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகளை பதிவிடுதல் மற்றும் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் பதிவேடுகள் காணப்படாமை.	➢ 2024 ஆண்டு தொடக்கம் தகவல் அறியும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், கோரப்படுகின்ற தகவல்களை வழங்காமை தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் பதிவிடப்பட்டு அது தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உள்ளடங்கிய ஏடுகளை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
2. நிறுவனம் தொடர்பில் பொதுமக்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவது தொடர்பில் இணையத்தளம் ஒன்று பேணிச்செல்லப்படவில்லை.	➢ நிறுவனம் தொடர்பில் பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவது தொடர்பில் இணையத்தளமொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் அதற்காக வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் நிதி என்பனவற்றை கருத்திற்கொண்டு அவற்றை இற்றைவரைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
3. நிறுவனத்தில் பேணப்படுகின்ற இணையத்தளத்தின் ஊடாக பொதுமக்களுக்கு பாராட்டுதல்கள் அல்லது முறைப்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.	➢ இணையத்தளத்தில் உரிய இற்றைவரைப்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்போது பொதுமக்களுக்கு பாராட்டுதல்கள் அல்லது முறைப்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.
4. திட்டமிடப்பட்ட பயிற்சிகளில் 50மூஇற்கும் குறைவான பயிற்சிகளே வழங்கப்பட்டிருந்தன.	➢ 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட அனைத்து பயிற்சி நடவடிக்கைகளும் கோவிட் தொற்று காரணமாக ஒன்லைன் ஊடாகவே பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 2024ஆம் ஆண்டில் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் 12 மணித்தியாலங்கள் பயிற்சிகளை வழங்கும் நோக்கில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. திணைக்களத்திற்குக் கிடைக்கும் ஏற்பாடுகளின் அடிப்படையில் அத்திட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

நிறுவனத்தின் கணக்கு தொடர்பான கணக்காய்வு கருத்துக்கள் பாதகமான மட்டத்தில் காணப்பட்டது.	➢ 2024 ஆம் நிதியாண்டில் நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு கருத்துக்கள் சாதகமான மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
6. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	➢ 2023 ஆண்டு தொடக்கம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. திணைக்களத்தின் பிரதேச மட்டத்தில் காணப்படும் பௌதீக மற்றும் மனிதவள பற்றாக்குறை காரணமாக சில சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படுகின்றன.
7. உத்தியோகத்தர்களால் அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நட்டங்கள் தொடர்பில் நி.பி.156(1) இன் பிரகாரம் அறவிடப்படவில்லை.	➢ 2024 நிதியாண்டு தொடக்கம் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நட்டங்கள் ∴ இழப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
8. உயர்ந்தபட்ச சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் உரிய விதத்தில் இடமாற்றம் செய்யப்படவில்லை.	➢ நாடளாவிய சேவையிலுள்ளோர் மற்றும் இணைந்த சேவைகளைச் சார்ந்தோர் தொடர்பில் அரசாங்க நிருவாக அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. திணைக்களம்சார் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏ.ஏ.டீ.டீ.டி.அலஹகோன்
பிரதான கணக்காளர்
வன பரிபாலனத் திணைக்களம்

A.A.D.D.D. Alahakoon
Chief Accountant
Department Of Forest Conservation,
Sampathpaya, Rajamalwatta Road,
Battaramulla.

ஈ.ஏ.பீ.என்.எதிரிசிங்க
வனப்பாதுகாவலர் நாயகம்
வன பரிபாலனத் திணைக்களம்

E. A. P. N. EDIRISINGHE
Conservator General of Forests
Department of Forest Conservation
"Sampathpaya" Rajamalwatta Road
Battaramulla

குணதாச சமரசிங்க
செயலாளர்
வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள்
பரிபாலன அமைச்சு

குணදාස සමරසිංහ
ලේකම්
වනජීවී හා වන සම්පත් සංරක්ෂණ
අමාත්‍යාංශය